## வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது வளர்நிலை - 8

“நூல் பல கல்" என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும். “கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்” என்பது ஆன்றோர் வாக்கு. வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால், புத்தகங்கள் பொதுவாகக் களவாடப் படுவதில்லை. புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்களால் தட்டிப் பறித்துவிட முடியாது. வாசிக்கும் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகின்றது. மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும், கிரகித்துக் கொள்ளவும், திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது. வாழ்வு வளம்பெற அறிவு தேவை. அறிவைப் பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமாகும். நூல்களை வாசிக்கும் பொழுது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும். அப்போது தான் நாம் விரும்பிய மனநிறைவைப் பெற முடியும். வாசித்தல் ஒரு சிறந்த பொழுதுபோக்கு. மகிழ்வைத் தந்து அறிவைப் பெருக்க உதவுவன நூல்களேயாகும். மாணவர்கள் இதனை மனதில் கொள்ளுதல் அவசியமாகும்.

“கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்" என்கிறார் திருவள்ளுவர்.

ஊனக் கண்ணினும் ஞானக் கண்ணே - அறிவுக் கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகிறது. கல்விப் பெருஞ்செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும். அவற்றை வாசிப்பது நம் கடமையாகும். நூல்களை வாசிக்க வாசிக்க பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாசிப்பதன் மூலமே நாம் பூரண மனிதராக, மனிதத் தன்மையுடையோராக மாண்புடன் வாழ முடியும் என்பதை உள்ளத்தில் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆனால் இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. தொலைக்காட்சி பார்ப்பதிலும், தொலைபேசியிலுமே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் கற்க வேண்டிய நேரம் வீண் விரயமாகின்றது. இதன் விளைவாக அவர்களது கல்வித் தரமே குன்றுகிறது. மாணவர்கள் தமது பொழுதைப்போக்க இவற்றையே நம்பி இருக்கின்றனர். அதே வேளை

நல்ல நண்பர்கள் எனக் கருதத் தகும் நூல்களை வாசிக்கத் தவறிவிடுகின்றனர். மிக அருமையாகவே ஒருசில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்குச் செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது.

நூல் பல கற்போம்!! நுண்ணறிவு பெறுவோம்!!

நன்றி, வணக்கம்!